மெரினாவில் கண்கவர் அணிவகுப்பு, கலைநிகழ்ச்சி

▶ தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், சென்னை காமராஜர் சாலையில் நேற்று நடைபெற்ற 76வது குடியரசு தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்துகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. உடன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர். **அடுத்தபடம்:** குடியரசு தின விழாவில், வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண் விருது, சிறந்த காவல்நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய வற்றை பெற்றுக் கொண்டவர்கள், முதல்வருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். **கடைசிபடம்:** அணிவகுப்பில் பார்வையாளர்களை கவர்ந்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அலங்கார ஊர்தி.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் குடியரசு தின விழா

ஆளுநர் மூவர்ண கொடியை ஏற்றினார்

ஏராளமான மக்கள் திரண்டு வந்து பார்வையிட்டனர்

21 அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு

பள்ளி, கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவிகளின் பிரமாண்ட கலைநிகழ்ச்சி

சென்னை, ஜன.27: நாட்டின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்றினார். 21 அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. இதனை ஏராளமான மக்கள் திரண்டு வந்து பார்வையிட்டனர்.

தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலை அருகே குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பங்கேற்பதற்காக காலை 7.52 மணிக்கு காவல்துறை வாகன அணிவகுப்புடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையாளர்களுக்கு வணக்கம் தெரிவித்தபடி நிகழ்ச்சி இடத்திற்கு வந்தடைந்தார். அவரை தலைமைச்செயலாளர் முருகானந்தம் வரவேற்றார்.

இதனையடுத்து, ராணுவத்தினரின் வாகன அணிவகுப்புடன் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வந்தார். அவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அதைத் தொடர்ந்து, ஆளுநருக்கு முப்படை தலைமை அதிகாரிகளான தென்னிந்திய பகுதிகளின் தலைமை படை தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்கரை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் எம்.ஷெனாய், வான்படை தலைமை அதிகாரி குரூப் கேப்டன் கே.எம்.ரகுராமன், கடலோர காவல் படை கமாண்டர் டி.எஸ் சைனி, தமிழக டிஜிபி சங்கர் ஜிவால், சென்னை காவல் ஆணையர் அருண், சட்டம்-ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் ஆசிர்வாதம் ஆகியோரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வைத்தார்.

இதனையடுத்து சரியாக காலை 8 மணியளவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்றினார். அப்போது ராணுவ ஹெலிகாப்டரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன. இதன் பின்னர், ராணுவப் படை, கடற்படைப்பிரிவு உள்ளிட்ட 43 வகையான படை பிரிவுகள் அணிவகுத்து வந்தன. இதன் மரியாதையை ஆளுநர் ஆர்.என். ரவி ஏற்றுக்கொண்டார்.

இதன் பின்னர், வீரதீரச் செயலுக்காக சென்னை மாவட்டம் முன்னணி தீயணைப்பு வீரர் வெற்றிவேலுவுக்கு அண்ணா பதக்கம் மற்றும் ரூ.1 லட்சம் காசோலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அதேபோல், வேளாண்மைதுறை சிறப்பு விருதும், நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருதும் ரூ.5 லட்சத்திற்கான காசோலை தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தை சேர்ந்த முருகவேலுவுக்கும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, காந்தியடிகள் காவலர் பதக்கம் விழுப்புரம் மண்டல மத்திய நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் சின்ன காமணனுக்கும், விழுப்புரம் தாலுக்கா சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலைய தலைமை காவலர் மகா மார்க்ஸ்க்கும், திருச்சி மாவட்டம் துறையூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு தலைமை காவலர் கார்த்திக், சேலம் மாவட்டம் ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர் சிவா, சேலம் மாவட்டம் ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர் பூமாலை ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.

அதேபோல், சிறந்த காவல் நிலையத்திற்கான முதல்வர் விருது முதல் பரிசு மதுரை மாவட்டம் சி-3 எஸ் எஸ் காலனி காவல் ஆய்வாளர் காசியும், இரண்டாம் பரிசு திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் உதயகுமார் மற்றும் மூன்றாம் பரிசு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி காவல் நிலைய ஆய்வாளர் மதியரசன் ஆகியோர் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோப்பைகளை பெற்றுக் கொண்டனர்.

இதனைதொடர்ந்து, 6 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த மாணவ - மாணவியர்களின் கரகாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம் போன்றவை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. இதன்பின்னர், முதன் முதலாக அலங்கார ஊர்தி அணிவகுப்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க வாகன அணி வகுப்பு தொடங்கியது. இதில், காவல்துறை, விளையாட்டுத்துறை உள்ளிட்ட 21 அலங்கார ஊர்தியில் அரசின் சாதனைகள் விளக்கப்பட்டிருந்தன.

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், கவர்னர் ஆர்.என்.ரவியின் மனைவி லட்சுமி, முதல்வர் மு.க.ஸ்டாலினின் மனைவி துர்கா, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டன்ற உறுப்பினர்கள், தலைமை செயலாளர் முருகானந்தம் மற்றும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இறுதியாக தலைமைச் செயலர் முருகானந்தம் அணிவகுப்பு தளவாய் விங் கமாண்டர் சர்தாக் புதியாவை ஆளுநருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதனையடுத்து நாட்டுப்பண் இசைக்கப்பட்டு ஆளுநர் மற்றும் முதல்வர் காலை 9.18 மணியளவில் விடைபெற்றுக் கொண்டனர்.

கோட்டை அமீர் விருதுக்கு ₹5 லட்சம்

கடந்த 2001ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு சிறப்பாக சேவை செய்து வரும் ஒரு நபருக்கு குடியரசு தின விழாவில் முதல்வரால் கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதை பெறக்கூடிய நபருக்கு பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.25 ஆயிரம் பரிசுத்தொகை வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மத நல்லிணக்க பதக்கத்திற்காக வழங்கப்படும் தொகை ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டிருந்தார். அந்தவகையில், இந்தாண்டுக்கான மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் விருது ராமநாதபுரம் மாவட்டம், வெளிபட்டினத்தை சேர்ந்த எஸ்ஏ.அமீர் அம்சாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். மேலும், அரசின் அறிவிப்பின் படி, பரிசு தொகையாக ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது.

5 அடுக்கு பாதுகாப்பு

குடியரசு தினத்தையொட்டி காமராஜர் சாலை முதல் வாலாஜா சாலை வரை 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போட்டப்பட்டிருந்தது. மேலும், காவல் இணை ஆணையர்களின் நேரடி மேற்பார்வையில், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

நீதி, சமத்துவம், மாண்பை உறுதி செய்யும்

அரசியலமைப்பு சட்டத்தின் அடித்தளத்தை போற்றுவோம்

முதல்வர் மு.க.ஸ்டாலின், குடியரசு நாள் வாழ்த்து

சென்னை, ஜன.27: அனைவருக்கும் நீதி, சமத்துவம், மாண்பு ஆகியவற்றை உறுதி செய்யும் அரசியலமைப்பு சட்டத்தின் அடித்தளத்தை போற்றுவோம் என குடியரசு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் டிவிட்டரில் பதிவிட்டிருப்பதாவது: இந்தியாவின் 76வது குடியரசு நாளில், அனைவருக்கும் நீதி, சமத்துவம், மாண்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் நமது அரசியலமைப்பு சட்டத்தின் அடித்தளத்தை போற்றுவோம். முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, கனிவான இந்தியாவைக் கட்டமைக்க வேண்டிய நம் கூட்டுக் கடமையினை இந்நாள் நமக்கு நினைவூட்டட்டும். அனைவருக்கும் நம்பிக்கையும் நல்நோக்கமும் நிறைந்த குடியரசு நாள் வாழ்த்துகள். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஜித்துக்கு பத்மபூஷண் நடிகர் சங்கம் வாழ்த்து

சென்னை, ஜன.27: தென்னிந்திய நடிகர்கள் சங்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தனக்கென்று ஒரு தனி பாணியை வகுத்து போட்டிகள் மிகுந்த திரைத்துறையில் உச்சத்தில் ஒரு இடம் பிடித்து, அரியதொரு போட்டியில் உலக வரைபடத்தில் தன் பெயரை பொன்னேட்டில் பதித்த நண்பர் அஜித் குமாருக்கு பத்மபூஷண் கௌரவம் கிடைத்ததில் தென்னிந்திய நடிகர் சங்கம் பெருமை கொள்கிறது. அதே போல் நடனத்தாலும் தனது நடிப்பாலும் ரசிகர்களின் மனங்களை வென்ற நடிகை ஷோபனாவுக்கும் வாழ்த்துக்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொடிநாள் நிதி வசூலில் முதலிடம்

அதனைத் தொடர்ந்து 2023ம் ஆண்டில் கொடிநாள் நிதி அதிகம் வசூலித்த மாவட்டங்களின் பட்டியலில் முதல் 3 இடங்களை சென்னை, திருவள்ளூர், திருச்சி மாவட்டங்கள் பெற்றன. இந்த மாவட்டங்களை சேர்ந்த கலெக்டர்கள், வருவாய்த் துறை அதிகாரியிடமும், மாநகராட்சியில் கோவை மாநகராட்சி கமிஷனருக்கும் சுழற் கோப்பைகளை கவர்னர் ஆர்.என்.ரவி வழங்கினார். அதுமட்டுமல்லாமல், அதிகளவில் கொடிநாள் நிதி பங்களிப்பு வழங்கிய சென்னை, பெரம்பலூர், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கும், காஞ்சிபுரம் மாநகராட்சிக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற சிறந்த அலங்கார ஊர்திகளுக்கு விருதுகள் வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டு விருதுகள் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசு தினத்தை ஒட்டி

ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்து

- **திமுக கூட்டணி கட்சிகள் புறக்கணிப்பு**
- **அதிமுக, பாஜ, தேமுதிக பங்கேற்பு**

சென்னை, ஜன.27: நாட்டின் 76வது குடியரசு தினம் நாடு முழுவதும் நேற்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தையொட்டி சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் தேநீர் விருந்து அளிக்கப்படுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டும் குடியரசு தினத்தை முன்னிட்டு, கவர்னர் ஆர்.என்.ரவி அளிக்கும் தேநீர் விருந்தில் கலந்து கொள்ளுமாறு அரசியல் தலைவர்களுக்கு கவர்னர் மாளிகை தரப்பில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஆளுநரின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் அவர் அளிக்கும் தேநீர் விருந்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டது. அதே போன்று, கவர்னரின் செயல்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், மதிமுக, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சிகளும் புறக்கணிப்பதாக அறிவித்தன. இந்நிலையில் நேற்று மாலை கவர்னர் மாளிகையில் கவர்னர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்து அளித்தார்.

இந்த தேநீர் விருந்தில் காங்கிரஸ், மதிமுக, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சிகளை சேர்ந்தவர்கள் யாரும் பங்கேற்காமல் புறக்கணித்தனர். பாமக சார்பிலும் யாரும் பங்கேற்கவில்லை. தமிழ்நாடு அரசும் தேநீர் விருந்தை புறக்கணித்தது. மேலும் நாதக, தவெக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களும் தேநீர் விருந்தில் பங்கேற்காமல் புறக்கணித்தனர்.

இந்த தேநீர் விருந்தில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், முன்னாள் எம்பி பாலகங்கா ஆகியோர் பங்கேற்றனர். பாஜ சார்பில் மாநில தலைவர் அண்ணாமலை, மூத்த தலைவர்கள் எச்.ராஜா, தமிழிசை சவுந்தரராஜன், நடிகர் சரத்குமார், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், தேமுதிக எல்.கே.சுதீஸ், பார்த்தசாரதி, புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் நீதிபதிகள், தியாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் இந்திய அரசியல் அமைப்பில் வலியுறுத்தப்பட்டு இருக்கும் நீதி, தன்னுரிமை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை மேற்கொள்காட்டி ராக் அகாடமி சார்பில் நாட்டிய நாடக நிகழ்ச்சி அரங்கேற்றப்பட்டது. இதனை அனைவரும் கண்டு ரசித்தனர்.

ELECTRONICS CORPORATION OF TAMILNADU LIMITED ELCOT
(ELCOT) CHENNAI – 600035.
TENDER NOTICE

ELCOT invites bids for the following tender

Tender No.	ELCOT/Proc/OT/33915 / SECNET/ 2024-25
Tender Details	AMC for the Servers, Network devices and its accessories commissioned at SECNET Control Room with Manpower support at Secretariat, Chennai
Pre- Bid Meeting	03.02.2025 @ 11.00 AM
Tender Submission Due date and Time	19.02.2025 @ 03.00 PM
Tender Opening Date & Time	19.02.2025 @ 04.00 PM
Earnest Money Deposit	Rs.4,00,000/- (Rupees Four Lakhs Only)
e-Portal Charges	Rs.11,800/- (including GST)

The Bidders may download the tender documents, help documents and user manuals from **https://tntenders.gov.in**

SD/-
GENERAL MANAGER (PROC)
ELECTRONICS CORPORATION OF TAMIL NADU LIMITED
692, II Floor, M.H.U. Complex, Anna Salai, Nandanam, Chennai - 600 035
e-mail: md@elcot.in URL: www.elcot.in

DIPR/301/Tender/2025

TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD
SUPERINTENDING ENGINEER, NORTH CIRCLE - II

NOTICE INVITING e- TENDER

Name of the work: Construction of Convenient Shops and Multipurpose Community Hall at Santhosh Nagar Scheme in Greater Chennai Corporation Division No. 61, Zone – V under Iyothee Thass Pandithar Fund For the year 2024 – 2025.

TENDER REFERENCE NO. TNUHDB / 387 / D1 / SE (NC-II) / 2024

The Superintending Engineer, North Circle - II on behalf of Tamil Nadu Urban Habitat Development Board invites submission of online bids from eligible bidders for the contract package named above. Bids are invited under two cover systems to be uploaded in the online web portal **https://tntenders.gov.in.**

Detailed Notice of Invitation of Bids and the Pre-Qualification Criteria and the Bid document for the above package would be available at **https://tntenders.gov.in** starting **from 28.01.2025** and Deadline of bid submission is **upto 03:00 PM on 12.02.2025.** All required information are provided in the bid document.

Bidders may contact Superintending Engineer, North Circle - II, TNUHDB through Email: **sechennainorthcircle2@gmail.com** for any other information on bidding process.

Superintending Engineer (FAC),
North Circle – II

DIPR/291/TENDER/2025

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: சோழா கிரெஸ்ட், சூப்பர் B, C54 & C55, 4, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

சுவாதீன அறிவிப்பு [(பிற்சேர்க்கை IV) விதி 8 (1)-ன் கீழ்]

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்–ன்** அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002), பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9–ன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)–ன் படியான **கீழ்க்காணும் தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை கடன்தாரர்களான** உங்களுக்கு **(பெயர் மற்றும் முகவரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன)** அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அதன் வட்டியுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கீழ்க்காணும் கடன்தாரர் அத்தொகையினைச் செலுத்தத் தவறியபடியால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் பொதுவாக இதன் மூலம் தெரிவிப்பது என்னவெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (4) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8–இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கைப்படுவது என்னவெனில் அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகையை அதன் வட்டியுடன் சேர்த்து கீழே கையொப்பமிட்டுள்ளவர் **M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்குச்** செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கான கால அவகாசம் தொடர்பானதில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13 துணைப் பிரிவு (8)–ன் விதிகளைக் கவனிக்கும்படி கடன்தாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் மற்றும் முகவரி & கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத் தொகை	அசையா சொத்தின் விவரம்	சுவாதீன தேதி
1.	கடன் க/கு எண்கள். X0HLHRR00002432271 சம்பத் S சுகுணா S இருவரின் வசிப்பிடம்: எண்: 976 ஹனுமந்தீர்த்தம் காட்டேரி, ஊத்தங்கரை, தர்மபுரி, தமிழ்நாடு 636902 மேலும் முகவரி: காட்டேரி ஊத்தங்கரை பொன்னுசாமி ஸ்டோர் 625 6250	25-10-2024	14–10–2024 தேதிப்படி ரூ.2787785/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுநூற்று எண்பத்தைந்து மட்டும்) மற்றும் அதன் மீதான வட்டி.	கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஊத்தங்கரை சா.ப.அ, ஊத்தங்கரை தாலுகா, அனுமந்தீர்த்தம் கிராமம், கதவு எண். 976, நத்தம் சர்வே எண். 24/38, பழைய சர்வே எண். 24/7 புதிய வருவாய் பதிவேடு ச.எண். 24/38 –ன் படி இதில் 1109 சதுர அடி பரப்பளவு கட்டிடத்துடன் கூடிய 1109 சதுர அடி நிலத்திற்கான எல்லைகள்: பஞ்சாயத்து சிமெண்ட் சாலையின் வடக்கு, தேன்மொழி வீட்டின் தெற்கு, பஞ்சாயத்து சிமெண்ட் சாலையின் கிழக்கு, ராஜேஸ்வரி வீட்டின் மேற்கு, அளவீடு: வடக்கில் கிழக்கு மேற்காக 33'6 அடி, கிழக்கில் தெற்கு வடக்காக 33 அடி, தெற்கில் கிழக்கு மேற்காக 33'6 அடி, மேற்கில் தெற்கு வடக்காக 33 அடி அனைத்து ஈஸ்மெண்ட்ஸ் உரிமைகள் மற்றும் பாதைகளுடன்.	சுவாதீன அறிவிப்பு– 22–01–2025.

இடம்: கிருஷ்ணகிரி
தேதி: 22–01–2025

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்–க்காக
அதிகாரப்பூர்வ அலுவலர்

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.

கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிக்கள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் **'உள்ளது எதுவோ அது'** மற்றும் **'எந்த உத்தரவாதமும் இல்லாத'** அடிப்படையில் **13–02–2025** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **13–02–2025** நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 12–02–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	20-01-2025 தேதிப்படி நிலுவைத் தொகை
1	TCHHF0482000100072444	திரு.மதிவாணன் J & திரு.ஜோஸ்ஃபினா M	ரூ.9069273/– (ரூபாய் தொண்ணூறு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று மட்டும்) 19–05–2022	ரூ.1,25,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் மட்டும்)	ரூ.12,50,000/– (ரூபாய் பனிரெண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	கையக (தரைத்தளம்) & அடையாளம் (மீதமுள்ள சொத்துகள்)	ரூ.1,35,20,517/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சத்து இருபதாயிரத்து ஐநூற்று பதினேழு மட்டும்)

அசையா சொத்தின் விவரம்: சேலம் ப.மா, சேலம் மேற்கு ப.மா, சேலம் மேற்கு இணை–1 சார் பதிவு மாவட்டம், சேலம் கண்ணங்குறிச்சி கிராமம், நில அளவை எண்.18/1, புஞ்சை ஏக்கர் 5.67 இந்த ஏக்கரில் 4.00 சென்ட் இதில் 1.62 சென்ட் நிலம் வீட்டுமனைகளாக அடங்கியுள்ளது. ஒப்புதல் உத்தரவு எண்.1374/05 மற்றும் 77/05 உள்ளூர் திட்டக்குழு மற்றும் கண்ணங்குறிச்சி டவுன் பஞ்சாயத்து நடவடிக்கை எண் 278/05 நாள் 12.09.2005 மற்றும் அந்த மனைகளில் ஒன்று 2025 சதுர அடி பரப்பளவு கொண்ட அந்த மனை இந்த விவரத்துடன் தொடர்புடையது. அதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகள்: என்.செல்வமணி, என்.பன்னீர்செல்வத்தின் விவசாய நிலத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு, கிழக்கு – மேற்கு சாலைக்கு **தெற்கு;** மணிமேகலைக்குச் சொந்தமான மாடிக் கட்டிடத்துக்கு மேற்கு; 33 1/2 அடி, தெற்கு பக்கம் 30 அடி; **வடக்கு–தென்கிழக்கு** பக்கம் 60 அடி; மேற்குப் பகுதியில் மொத்தம் 2025 சதுர அடி நிலம் முழுமையாக மற்றும் கட்டிடங்கள் மற்றும் மேற்கண்ட கட்டிடத்தின் அனைத்து பொருத்துதல்கள் மற்றும் அனைத்து நடைபாதையுடனும் அதனுடன் இணைக்கப்பட்ட உரிமைகளுடன். மறு நில அளவை எண்.18/1a மற்றும் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.

குறிப்பு:– TCHFL–க்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு (Os/235/2024) சேலம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்கூறிய வழக்கில் TCHFL–க்கு எதிராக தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் உரிய விசாரணை செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வ